(ஆ) மீண்டும் தேசீய மாணவர்படை துவங்க அரசிற்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) அதன் மீது நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) மீண்டும் இப்பள்ளியில் தேசீய மாணவர் படை பயிற்சியைத் தொடர்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மீண்டும் குத்தாலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தேசீய மாணவர் படை துவங்கப்பட ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கு ஜூனியர் டிவிஷன் தொடங்கி அப்பள்ளிக்கு 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாங்கள் துவங்குவதற்கான ஆணை பிறப்பித்துள்ளோம். துவங்கவேண்டியது அவர்கள்தான்.

அரசு கலைக் கல்லூரி, கரூர்.

*வினா எண் 208—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் அரசினர் கலைக் கல்லூரி கட்டப்பட்டுள்ள இடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கரூர் அரசினர் கலைக் கல்லூரி, தான்தோனிமலை அருள்மிகு வெங்கடராமசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் நெடுங் காலமாக இருப்பதாலும், கல்லூரியை அங்கிருந்து அகற்ற சாத்தியமில்லாததாலும், அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயித்து, அத்தொகையைக் கோவிலுக்குக் கொடுக்க அரசு ஆலோசித்து வருகிறது, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரை அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயிக்கும்படி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் 209, 210, 211, 212 ஆகியவை தள்ளி வைக்கப்படுகின்றன.

காளப்பநாயக்கன்பட்டி—சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 213—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் பகுதிகளுக்கு குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) உண்டு.

(ஆ)) காளப்ப நாயக்கன் பட்டி, பேரூராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களான நடுக்கொம்பை, நாச்சிபுத்தூர் ஆகியவற்றிற்கும் சேர்த்து கருவட்டாறு ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு கூட்டு குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுப் பணி நடைபெறுகிறது. ஆய்வுப் பணி முடிந்த பின் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் கிடைத்த பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் செயல் படுத்த அரசு ஆணை எண் 1467, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 16–9–1978 இல் ரூபாய் 24.13 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தலைமையிடம் அமைப்பதில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு நாமக்கல் முனிசீப் கோர்ட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆதலால் பணிகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.